DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 1438/2022

Prosecution witness – PW.5

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.ரவி | Caste: | |
| Father's Name | :கருப்பையா | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

02.06.2025 – 11.10 AM

1 மற்றும் 2 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகளுக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் காடமங்கலம் கிராமத்தில் குடியிருந்து அங்குள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு நான் பெருநாழியில் உள்ள டீக்கடையில் டீ சாப்பிடுவதற்காக வந்த போது போலீசார் என்னிடம் ஒரு எழுதிய பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். எதற்காக கையொப்பம் பெற்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. நான் கடந்த 01.11.2022ம் தேதியன்று 13.00 மணிக்கு எங்கள் ஊர் கண்ணாயிர மூர்த்தி கோவில் அருகில் இருந்தபோது பெருநாழி போலீசார் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 65 U 1896 என்ற பதிவு எண் கொண்ட JCB வாகனத்தை கைப்பற்றி தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்ததாகவும், என்னுடன் எங்கள் ஊரைச் சேர்ந்த திருஞானம்

என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/– திருமதி.க.தங்க கார்த்திகா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.